**PPSC Circular No : AD/Rec/REV/2024**

**கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2024**

கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மாகாண இறைவரிசேவை அலுவலர்களிடமிருந்தோ, இலங்கை உள்நாட்டு இறைவரிசேவை அலுவலர்களிடமிருந்தோ விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் பதவிகள்,

(i) மாகாணப் பிரதி ஆணையாளர்
(ii) மாகாண மதிப்பீட்டாளர்
(iii) வரி உத்தியோகத்தர்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **30.04.2024** ஆகும்.

**02. ஆட்சேர்ப்பு முறை:**

2.1. இந்த விளம்பரத்துக்கு அமைவாக விண்ணப்பிக்கும் மாகாண இறைவரிசேவை அலுவலர்களோ இலங்கை உள்நாட்டு இறைவரிசேவை அலுவலர்களோ கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அந்த நேர்முகப்பரீட்சையின் போது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைவாக விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் மாகாண இறைவரி/ இலங்கை உள்நாட்டு இறைவரி சேவை சேவை உத்தியோகத்தர் தனது பதவியிலிருந்து முழுமையாக விடுவிப்பை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**03. தகைமைகள்:**

**1. பிரதி ஆணையாளர் :**

(i) மாகாண இறைவரிசேவையில (ஏதாவது மாகாணம்) அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிசேவையில் வகுப்பு I ஐ சார்ந்த அலுவலராக இருத்தல்.

**குறிப்பு:** மாகாண இறைவரிசேவையில் (ஏதாவது மாகாணம்) அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிசேவையில் வகுப்பு I ஐ சார்ந்த அலுவலகராக இல்லாதவிடத்து மாகாண இறைவரிசேவையில் (ஏதாவது மாகாணம்) அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிசேவையில் வகுப்பு 2 இல் தரம் I இல் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அலுவலர் இந்த பதவிக்கு கருத்தில் கொள்ளப்படுவர்.

**2. வரி மதிப்பீட்டாளர் :**

(i) மாகாண இறைவரிசேவையில் (ஏதாவது மாகாணம்) அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிசேவையில் மதிப்பீட்டாளர் பதவியில் வகுப்பு 2 இல் தரம் I/II இலுள்ள அலுவலராக இருத்தல்.

**3. வரி உத்தியோகத்தர் :**

(i) மாகாண இறைவரிசேவையில் (ஏதாவது மாகாணம்) அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிசேவையில் வரி உத்தியோகத்தர் பதிவியில் வகுப்பு 3 இல் தரம் I/II அலுவலராக இருத்தல்.

**04. விண்ணப்பிக்கும் முறை :**

4.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

4.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிய குறியீட்டு இலக்கமின்றியும், உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இவ் உள்ளக சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.3. இந்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் இலங்கை உள்நாட்டு இறைவரிதிணைக்களத்தில் சேவையிலுள்ள அலுவலர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் சிபார்சுடனும் மாகாண சபையில் கடமையாற்றும் அலுவலர்கள் உரிய மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்/ பிரதம செயலாளர் அவர்களது சிபார்சுடன் அனுப்பி வைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் அதற்கு விடுவிப்பதற்கு முடியும் என குறிப்பிடப்பட்டுள்ள பகுதி மிகச்சரியாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.4 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **30.04.2024** திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனால் அதற்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

4.5 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் குறியீட்டு இலக்கம் **AD/Rec/REV/2024** என்பதை குறிப்பிடுவதோடு **"கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2024"** என குறிப்பிடுதல் வேண்டும்.

4.6. மேலே பந்தி இல.2.1 இல் குறிப்பிட்டமைக்கு அமைவாக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை **30.04.2024** ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியமைக்குரிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளளோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிடப்பட்ட கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர். உரிய கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதனால் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது. **தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது இப் பதவிக்கு விண்ணப்பித்தல் தவறொன்றாக கருதப்படும்.**

**05. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதாவது ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**06. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் முன்னரோ கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் வேட்புரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் அல்லது வழங்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே வழங்காமல் விடும் எச்சந்தர்ப்பத்திலும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியும் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

**07. கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை :**

**புள்ளிகள் வழங்கப்படும் முறை**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | புள்ளிகள் |
|---|---|
| (i) சேவை மூப்பு | 30 |
| (ii) திறமை | 20 |
| (iii) சேவை அனுபவம் | 15 |
| (iv) மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| (v) நேர்முகப்பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | 10 |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** |

கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் திட்டம் "இணைப்பு -1" இல் வழங்கப்பட்டுள்ளது.

**08.** கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**09.** கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையானது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நடாத்தப்படும்.

**10.** தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் அத் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களில் சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

11. இந்த உள்ளக சுற்றறிக்கையில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அது தொடர்பில் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும், அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகுமிடத்து அல்லது கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையை இரத்து செய்வதற்கும் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும், இந்த பதவிக்கான நியமிப்பு செய்வதா இல்லையா என்பது தொடர்பிலும் கிழக்கு மாகாண ஆளுநர் / பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுரைக்கமைய கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கே அதிகாரம் உண்டு.

**ஆ.மன்சூர்**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம், திருகோணமலை.

திகதி – **09.04.2024**

**AD/Rec/REV/2024**

| |
|---|
| |

மாதிரி விண்ணப்பப்படிவம் (அலுவலக உபயோகத்திற்கு)

**கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2024**

*மொழிமூலம் :*
தமிழ் - **T,** சிங்களம் - **S**
(உரிய எழுத்தினை கூட்டினுள் இடவும்)

நிரந்தர வதிவிட மாவட்டம் : ..........................................

| | |
|---|---|
| பிரதி ஆணையாளர் | |
| மதிப்பீட்டாளர் | |
| வரி உத்தியோகத்தர் | |

(விண்ணப்பிக்கும் பதவிக்கு எதிரே " ✓" அடையாளம் இடுக)

1.0 i. உத்தியோகத்தரது பெயர் : வண/திரு/திருமதி/செல்வி……………………………..................................

ii. சேவை புரியும் நிலையம் மற்றும் முகவரி :…………………………………………………...................................
……………………………………………………….................
……………………………………………………….................

iii. தற்போது வகிக்கும் பதவி :……………………...……………………………………………………………….

iv. சேவை வகை :……………………………………………………………………………….…………….

v. பிறந்த திகதி :…………………………………………………………………………….……………

vi. வகுப்பு மற்றும் தரம் :……………………………....……………………………………...…………..

vii. சேவைக்காலத்தில் எடுத்துள்ள சம்பளமற்ற விடுமுறை விபரங்கள் :

| **இருந்து** | **வரை** | **வருடங்கள்** | **மாதங்கள்** | **நாட்கள்** |
|---|---|---|---|---|
| …………………… | …………………….. | ………….. | …………. | ……… |
| …………………… | …………………….. | ………….. | …………. | ……… |
| …………………… | …………………….. | ………….. | …………. | ……… |

viii. விண்ணப்ப முடிவுத்திகதியன்று உரிய தரத்தில் தொடர்ச்சியான சேவைக்காலம் :

வருடங்கள் …….. மாதங்கள் …….. நாட்கள் ……..

ix. சேவைக்காலத்தில் பெற்றுக்கொண்ட சேவை அனுபவ விபரங்கள் :

| **சேவை நிலையம்** | **சேவைக்காலம்** | | **காலம்** |
|---|---|---|---|
| | **ஆரம்பித்த திகதி** | **முடிவுறுத்திய திகதி** | **வருடம் மாதம் நாள்** |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

x. நேர்முகப்பரீட்சைக்கு முந்தைய 05 வருடங்களுக்கான மதிப்பீட்டுச்செயலாற்றுகைகளில் பெறப்பட்ட தரப்படுத்தல். (பொருத்தமற்றவற்றை வெட்டி விடவும்)

| **வருடம்** | **மதிப்பீட்டுச்செயலாற்றுகையில் பெறப்பட்ட தரப்படுத்தல்** |
|---|---|
| 2018 | மிகச்சிறப்பு / சராசரிக்கு மேல் / திருப்திகரமானது |

| | |
|---|---|
| 2019 | மிகச்சிறப்பு / சராசரிக்கு மேல் / திருப்திகரமானது |
| 2020 | மிகச்சிறப்பு / சராசரிக்கு மேல் / திருப்திகரமானது |
| 2021 | மிகச்சிறப்பு / சராசரிக்கு மேல் / திருப்திகரமானது |
| 2022 | மிகச்சிறப்பு / சராசரிக்கு மேல் / திருப்திகரமானது |

## 2.0 விண்ணப்பதாரியின் உரை

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) மேலும் கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(இ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

திகதி …………………………..                ………………………………………..

விண்ணப்பதாரியின் கையொப்பம்

## 3.0 திணைக்களத்தலைவரின் சிபார்சு

திரு/திருமதி/செல்வி ……………………………………………..……………….. அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து முன்னளிக்கிறேன்.

……………………………………

திணைக்களத்தலைவரின் கையொப்பம்

பெயர் : ………………………………

பதவி : ………………………………

விலாசம் : ………………………………

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

திகதி : ……………………………..

## 4.0 மாகாண பிரதம செயலாளர் / இறைவரி ஆணையாளர் நாயகம் / மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் சிபார்சு

திரு/திருமதி/செல்வி ……………………………………………..………………..அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து முன்னளிக்கிறேன். அவர் மேற்குறித்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் அவரை குறித்த திணைக்களம் / மாகாண பொதுச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என அறியத்தருகிறேன்.

……………………………………

கையொப்பம்

பெயர் : ………………………………

பதவி : ………………………………

விலாசம் : ………………………………

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

திகதி : ……………………………..